சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பு அமைப்பு
ஓய்வூதிய திட்டம் (3 தூண்கள்)
ஊனமுற்றோர் காப்பீடு
வேலையின்மை காப்பீடு
மருத்துவ மற்றும் விபத்து காப்பீடு
பெற்றோர் மற்றும் குடும்பம்: விடுப்பு மற்றும் நிதி உதவி
சமூக உதவி

சமூகப் பாதுகாப்பு அமைப்பு

வாழ்க்கை சில நேரங்களில் நோய், விபத்து அல்லது வேலையின்மை போன்ற பிரச்சினைகளைக் கொண்டுவருகிறது. சுவிட்சர்லாந்தில், இந்த சூழ்நிலைகளில், சமூகப் பாதுகாப்பு குடியிருப்பாளர்களைப் பாதுகாக்கிறது. பல்வேறு சமூகக் காப்பீட்டுத் திட்டங்கள் மூலம், சமூகப் பாதுகாப்பு உங்களிடம் வாழ்வதற்குப் போதுமான பணம் இருப்பதை உறுதி செய்கிறது. இது குடும்பங்கள் மற்றும் முதியோர்களையும் பாதுகாக்கிறது.

சமூகப் பாதுகாப்பு எவ்வாறு செயல்படுகிறது?

சமூகப் பாதுகாப்பின் நிதி எங்கிருந்து வருகிறது?
சமூகப் பாதுகாப்புப் நிதி பொதுவாக வேலையில் இருப்பவர்களிடமிருந்தும் அவர்களின் நிறுவனங்களிடமிருந்தும் வருகிறது.
சமூகப் பாதுகாப்பு நிதியை திரட்ட ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்திலும் ஒரு பகுதி ஒவ்வொரு மாதமும் பிடிக்கப் படுகிறது.
ஆரோக்கியமானவர்களிடமிருந்து வரும் பணம் நோய்வாய்ப் பட்டவர்களுக்கு உதவுகிறது. இளைய ஊழியர்களிடமிருந்து வரும் பணம் முதியோர் காப்பீட்டிற்குச் உதவுகிறது.
உதவி பெறும் சிறிய குழுவினருக்கு ஏராளமான குடியிருப்பாளர்கள் பணம் செலுத்துகிறார்கள்.
இது solidarité (ஒற்றுமைத்துவம்) என்று அழைக்கப்படுகிறது.
சமூக காப்பீடு பெரும்பாலும் கட்டாயமாகும். ஒவ்வொரு மாதமும், பணியாளரின் சம்பளத்தில் ஒரு பகுதி சமூக காப்பீட்டு நிதிக்காக பிடிக்கப் படுகிறது.
சுயதொழில் செய்பவர்கள் மற்றும் வேலையில்லாதவர்களும் கட்டாயப் பகுதியை செலுத்துகிறார்கள்.
சமூக காப்பீடுகள் அனைத்தும் சட்டத்தால் கட்டுப்படுத்தப் படுகின்றன.

சமூக காப்பீட்டுகளின் பல்வேறு வகையான ஆதரவுகள்

சமூகப் பாதுகாப்பு மக்களுக்கு பல்வேறு வழிகளில் ஆதரவாக இருக்கிறது:
• ஓய்வூதியம் மூலம்: பணம் மாதந்தோறும் பல ஆண்டுகளுக்கு செலுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, AVS (முதியோர் மற்றும் வாரிசு) ஓய்வூதியம் அல்லது AI (ஊனமுற்றோர்) ஓய்வூதியம்.
• தினசரி கொடுப்பனவுகள் மூலம்: வேலை செய்யாத ஒவ்வொரு நாளுக்கும் பணம் செலுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வேலையின்மை காப்பீடு.
• துணைப் பலன்கள் (இவை: PC என்றும் அழைக்கப்படுகின்றன): வாழ்வதற்கு போதுமான பணம் இல்லாதவர்களுக்கு கூடுதலாக பணம் வழங்கப்படுகிறது.
நோய் அல்லது விபத்து ஏற்பட்டால், முழு அல்லது பகுதி மருத்துவச் செலவுகளை காப்பீடு கட்டும்.

எப்போது நிதி உதவி பெறுவோம்?

• ஓய்வு பெற்றவுடன் (65 வயதிலிருந்து): இது முதியோர் ஓய்வூதியம் (AVS உடன், மற்றவற்றுடன்),
• இறப்பு ஏற்பட்டால்: கணவன் அல்லது மனைவி மற்றும் குழந்தைகள் முதியோர் மற்றும் வாரிசு ஓய்வூதியம் (AVS) பெறுகிறார்கள்,
• ஊனம் ஏற்பட்டால்: ஊனத்தினால் வேலை செய்ய முடியாவிட்டால், ஊனமுற்றோர் ஓய்வூதியம் (AI) கிடைக்கும்.

மேலும் கூடுதலாக:

• நோய் அல்லது விபத்து ஏற்பட்டால் (மருத்துவ மற்றும் விபத்து காப்பீடு),
• மகப்பேறு (மகப்பேறு காப்பீடு),
• வேலையின்மை ஏற்பட்டால் (வேலையின்மை காப்பீடு),
• குழந்தைகள் இருக்கும் போது (குடும்ப கொடுப்பனவுகள்).

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/le-systeme-de-la-securite-sociale

ஓய்வூதிய திட்டம் (3 தூண்கள்)

சுவிட்சர்லாந்தில், ஓய்வூதிய திட்டம் ஓய்வு பெற்றவர்களுக்கு வாழ்வதற்கு போதுமான பணம் இருப்பதை உறுதி செய்கிறது. ஓய்வூதிய திட்டம் மூன்று தூண்களைக் கொண்டுள்ளது: முதியோர் மற்றும் வாரிசு காப்பீடு (AVS), தொழில்முறை காப்பீடு (LPP), மற்றும் தனிநபர் காப்பீடு (3வது தூண்).

AVS: முதியோர் மற்றும் வாரிசு காப்பீடு (1வது தூண்)

முதியோர் மற்றும் வாரிசு காப்பீடு (AVS) என்பது அடிப்படை தேசிய ஓய்வூதியமாகும். AVS ஓய்வு பெற்றவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குகிறது.
ஓய்வூதியத்தின் தொகை, ஒருவர் பணியாளராக எத்தனை ஆண்டுகள் பங்களித்தார் என்பதைப் பொறுத்தது. அந்தத் தொகை, அவர் பெற்ற சராசரி சம்பளம் எவ்வளவு என்பதைப் பொறுத்தது.
ஒருவர் இறந்தால், இறந்தவரின் துணைவர் மற்றும் குழந்தைகளுக்கு AVS உதவி வழங்குகிறது (விதவன் அல்லது விதவை மற்றும் அனாதை ஓய்வூதியம்).
அனைத்து பெரியவர்களும் AVSக்கு பங்களிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும், பணியாளரின் சம்பளத்தில் ஒரு பகுதி AVS நிதிக்காக பிடிக்கப் படுகிறது. இது பங்களிப்பு நிதியில் பாதி. மறு பாதியை நிறுவனம் செலுத்தும்.
சுயதொழில் செய்பவர்கள் மற்றும் வேலையில்லாத நபர்களும் தங்கள் பங்களிப்புகளைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்ய, அவர்கள் கொம்யூனிய AVS நிறுவனத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்.

தொழில்முறை ஓய்வூதியத் திட்டம் (2வது தூண் - LPP)

AVS ஓய்வூதியம் மட்டும் ஓய்வு பெறுவதற்கு முன்பு இருந்த ஊதிய அளவுக்கு ஓய்வூதித்தை வழங்குவதில்லை. இந்தக் காரணத்திற்காக, ஊழியர்களுக்கு ஒரு தொழில்முறை ஓய்வூதியத் திட்டமும் (LPP) உள்ளது, இது ஒரு குறிப்பிட்ட ஆண்டு வருமானத்திற்கு மேல் உள்ள ஊழியர்களுக்கு கட்டாயமாகும். தொழில்முறை ஓய்வூதியத் திட்டம் (LPP) 2வது தூண் அல்லது ஓய்வூதிய சேமிப்புநிதி என்றும் அழைக்கப்படுகிறது.
ஒவ்வொரு மாதமும், ஊழியரின் சம்பளத்தில் ஒரு பகுதி LPP நிதிக்காக பிடிக்கப் படுகிறது. இது பங்களிப்பு நிதியில் பாதி. மறு பாதியை நிறுவனம் செலுத்தும்.
நபர் ஓய்வு பெறும்போது, ஓய்வூதிய சேமிப்பு நிதியில் (அல்லது LPP) சேமிக்கப்பட்ட பணத்தை இரண்டு சாத்தியமான வடிவங்களில் பெறுகிறார்:

- ஒன்று மாதாந்திர வடிவில் (மாதாந்திரம் பெறப்படும்)
- அல்லது மொத்த தொகையாக (ஒரே தடவை பெறப்படும்).

நபர் அவர் விரும்பும் வடிவத்தைத் தேர்வு செய்யலாம்.
சில சந்தர்ப்பங்களில், பணத்தை முன்னதாகவே கோரலாம்:

- தான் தன் சொந்த நிறுவனத்தைத் தொடங்கும்போது,
- தான் சுவிட்சர்லாந்திற்கு வெளியே குடிபெயரும் போது, சில நிபந்தனைகளின் கீழ்,
- தான் வசிக்க ஒரு வீட்டைக் கட்டும்போது அல்லது அடுக்குமாடி குடியிருப்பை வாங்கும்போது.

சுயதொழில் செய்பவர்கள் பங்களிப்பு செய்யத் தேவையில்லை. அவர்கள் தானாக முன்வந்து அவ்வாறு செய்யலாம். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவர்களின் பொறுப்பு. அதற்கு, அவர்கள் ஓய்வூதிய சேமிப்பு நிதி நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

தனியார் ஓய்வூதிய திட்டம் (3வது தூண்)

3வது தூண் மூலம் உங்கள் ஓய்வுக் காலத்தை சிறப்பாக பாதுகாக்க முடியும். இது ஒரு தனியார்மற்றும் தனிநபர் ஓய்வூதிய திட்டம்.
இது கட்டாயமில்லை, ஆனால் பரிந்துரைக்கப்படுகிறது. இது ஓய்வூதியத்திற்கான கூடுதல் சேமிப்பை வழங்குகிறது.
ஒருவர் வங்கி அல்லது காப்பீட்டு நிறுவனத்தில் 3வது தூணை ஏற்பாடு செய்து கொள்ளலாம். (3a எனப்படும்) 3வது தூணில் செலுத்தப்பட்ட தொகையை உங்கள் வரிகளிலிருந்து கழிக்கலாம்.

AVS துணைப் பலன்கள் (அல்லது PC AVS)

சில நேரங்களில், AVS மற்றும் சேமிப்பு நிதி இருந்த போதும், முதியவர்களுக்கு தங்களின் (உணவு, வீடு போன்ற) அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான பணம் இருக்காது.
அப்படியானால் அவர்கள் துணைப் பலன்களுக்கு (அல்லது PC) உரிமை பெறலாம். அவர்கள் கொம்யூனிய AVS நிறுவனத்திடமிருந்து PCக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
துணைப் பலன்களுக்கு (PC) யார் தகுதியானவர்கள், அல்லது அற்றவர்கள், என்பதற்கு தெளிவான விதிகள் உள்ளன.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/la-prevoyance-vieillesse-les-3-piliers

ஊனமுற்றோர் காப்பீடு

சில நேரங்களில், உடல்நலப் பிரச்சினைகள் அல்லது ஊனம் காரணமாக, ஒரு நபர் வேலை செய்ய முடியாது அல்லது இனி வேலை செய்ய முடியாது. அல்லது அவர் தன் வேலை நேரத்தைக் குறைத்து பகுதிநேர வேலை செய்ய வேண்டும். இது நீண்ட காலத்திற்கு நடக்கும். அப்படியென்றால் அந்நபர் ஒரு ஊனமுற்றோர் என்கிறோம். அந்நபர் சில நிபந்தனைகளின் கீழ் ஊனமுற்றோர் காப்பீட்டிலிருந்து (AI) நிதி உதவி பெற உரிமை உண்டு. AI பணம் மட்டும் செலுத்துவதில்லை. அது மக்கள் வேலைக்குத் திரும்பவும் உதவுகிறது. இது வேலையில் மறு இணைப்பு என்று அழைக்கப்படுகிறது.

ஊனமுற்றோர் காப்பீடு

ஊனமுற்றோர் காப்பீடு (AI) என்பது ஒரு அடிப்படை தேசிய காப்பீடு.
அனைத்து பெரியவர்களும் AI-க்கு பங்களிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும், பணியாளரின் சம்பளத்தில் இருந்து ஒரு பகுதி AI நிதிக்கு பிடிக்கப் படுகிறது. இது பங்களிப்பு நிதியில் பாதி. மறு பாதியை நிறுவனம் செலுத்தும்.
சுயதொழில் செய்பவர்கள் மற்றும் வேலையில்லாதவர்களும் தங்கள் பங்களிப்புகளைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்ய, அவர்கள் வசிக்கும் கொம்யூனில் உள்ள AVS/AI நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஊனமுற்றோர் காப்பீடு (AI) சேவைகள்

AI [illegible]?
(உடல் அல்லது மனநல) பிரச்சினைகள் அல்லது குறைபாடுகள் காரணமாக குறைந்தது ஒரு வருடத்திற்கு வேலை செய்ய முடியாதவர்கள் (அல்லது பகுதிநேரமாக மட்டும்) ஊனமுற்றோர் காப்பீட்டிலிருந்து (AI) உதவி பெற உரிமை உண்டு.
AI நிதி அல்லது ஆதரவு போன்ற பல்வேறு வடிவங்களில் உதவி வழங்குகிறது. உதாரணமாக:
- மறுவாழ்வு மற்றும் மறு இணைப்பு நடவடிக்கைகள் (பயிற்சி மற்றும் வேலை தேட),
- தினசரி கொடுப்பனவுகள், அல்லது
- ஓய்வூதியங்கள்.

ஒருவர் தனது உடல்நலம் அல்லது இயலாமை காரணமாக வேலை செய்ய முடியாது என்றால் மட்டுமே AI ஓய்வூதியத்தைப் பெறுகிறார்.
AI சலுகைகளைப் பெற, நாம் காந்தோனிய சமூக காப்பீட்டு அலுவலகத்தில் (AI அலுவலகம்) விண்ணப்பிக்க வேண்டும்.

AI யின் துணைப் பலன்கள் (AI யின் PC க்கள்)

AI ஓய்வூதியத்தில், சிலருக்கு தங்களின் (உணவு, வீடு போன்ற) அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான பணம் இல்லை.
இவர்கள் துணை சலுகைகளுக்கு (PC) தகுதி பெறலாம். அவர்கள் வசிக்கும் கொம்யூனில் உள்ள AVS/AI நிறுவனத்தில் PC க்கு விண்ணப்பிக்க வேண்டும்.
துணைப் பலன்களுக்கு யார் தகுதியானவர்கள், அல்லது அற்றவர்கள், என்பதற்கு தெளிவான விதிகள் உள்ளன.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/lassurance-invalidite

வேலையின்மை காப்பீடு

அனைத்து ஊழியர்களும் வேலையின்மைக்கு எதிராக காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். நீங்கள் வேலையை இழந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு நிதி உதவி பெறலாம். இதைச் செய்ய, Office Régional de Placement (ORP)-ல் (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகம்) பதிவு செய்ய வேண்டும். ORP கள் வேலையில்லாதவர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அவர்களின் வேலை தேடலுக்கு உதவுகின்றன.

வேலையின்மை காப்பீடு

அனைத்து ஊழியர்களும் வேலையின்மை காப்பீட்டிற்கு (AC) பங்களிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும், பணியாளரின் சம்பளத்தில் ஒரு பகுதி AC நிதிக்காக பிடிக்கப் படுகிறது. இது பங்களிப்பு நிதியில் பாதி. மறு பாதியை நிறுவனம் செலுத்தும்.
நீங்கள் வேலையை இழந்தால், வேலையின்மை நிதியிலிருந்து வேலையின்மை சலுகைகளைப் பெறுவீர்கள். வேலையின்மை சலுகைகளின் அளவு பல்வேறு அளவுகோல்களைப் பொறுத்தது.
நீங்கள் சுயதொழில் செய்பவரா?
அப்படியானால் வேலையின்மை காப்பீட்டிற்கு விண்ணப்பிக்க முடியாது.

வேலையில்லாமல் இருக்கிறீர்களா? என்ன செய்ய வேண்டும்?

வேலையை இழக்கப் போகிறீர்களா? வேலையை இழந்துவிட்டீர்களா? அப்படியென்றால்,. மிக அருகிலுள்ள Office régional de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகத்தில்) கூடிய விரைவில் பதிவு செய்யுங்கள்.
Jobroom?? ?????????? ?????? ????????????.
குறிப்பு: வேலையை இழக்கப் போகிறீர்கள் என்று அறிந்தவுடன் எங்களுக்குத் தெரிவிக்கவும். முடிந்த வரை, வேலையின்மையின் முதல் நாளுக்குள்.
ORP உங்களுக்கு தகவல் மற்றும் ஆதரவை வழங்கும்.

Offices régionaux de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகங்கள்)

L'Office régional de placement (ORP) (பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலகம்) உங்களுக்கு ஆலோசனை வழங்கி, வேலையை விரைவாகக் கண்டுபிடிக்க உதவுகிறது.
நீங்கள் வேலையின்மை சலுகைகளைப் பெற்றால், நேர்காணல்களில் கலந்து கொள்ள வேண்டும். இது கட்டாயமாகும்.
ORP பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகள் மற்றும் திட்டங்களையும் வழங்குகிறது. உங்கள் தனிப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்து, சில கட்டாயமாகும், மற்றவை கட்டாயமில்லை.
நீங்கள் சுவிட்சர்லாந்தில் இன்னும் வேலை செய்யவில்லையா? வேலை தேடுகிறீர்களா?
நீங்கள் ORP இல் பதிவு செய்யலாம். உதாரணமாக, உங்கள் CV ஐ எவ்வாறு எழுதுவது என்பது குறித்த ஆலோசனைகளைப் பெறலாம். ஆனால், நீங்கள் வேலையின்மை சலுகைகளைப் பெற மாட்டீர்கள்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/lassurance-chomage

மருத்துவ மற்றும் விபத்து காப்பீடு

சுவிட்சர்லாந்தில் வசிப்பவருக்கு மருத்துவ மற்றும் விபத்து காப்பீடு (LAMal) இருக்க வேண்டும். இது கட்டாயமாகும். விபத்து, நோய் அல்லது மகப்பேறு ஆகியவற்றின் செலவுகளில் ஒரு பகுதியை இந்த சமூக காப்பீடு ஈடுகட்டுகிறது. நீங்கள் சுவிட்சர்லாந்திற்கு வந்த 3 மாதங்களுக்குள் மருத்துவ காப்பீட்டை எடுக்க வேண்டும்.

சுகாதார காப்பீடு (அடிப்படை காப்பீடு - LAMal)

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர்களும் மருத்துவ காப்பீட்டை (அடிப்படை காப்பீடு - LAMal) தாங்களாகவே எடுக்க வேண்டும். இது கட்டாயமாகும்.
நீங்கள் சுவிட்சர்லாந்துக்கு வருகிறீர்களா?
உங்களுக்கு மருத்துவக் காப்பீடு எடுக்க 3 மாதங்கள் உள்ளன.
இந்த சமயத்தில் நீங்கள் நோய்வாய்ப்பட்டால், செலவுகளுக்கு பின்னர், அந்த தொகை உங்களுக்கு பிறகு வழங்கப்படும்.
பல மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் அடிப்படை காப்பீட்டை வழங்குகின்றன.
மருத்துவ காப்பீட்டு வழங்குநரைத் தேர்வுசெய்ய உங்களுக்கு சுதந்திரம் உண்டு.
அடிப்படை காப்பீட்டைப் பொறுத்தவரை, மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்கும் அனைவரையும், நோய்வாய்ப்பட்டவர்களையும் கூட ஏற்றுக்கொள்ள வேண்டும்.

□□□□□□□□□ □□□□□□□□□: □□□ □□□ □□□□□□□□□□□□□□?

அடிப்படை காப்பீடு நோய் ஏற்பட்டால் அதன் செலவுகளை ஏற்கிறது, கர்ப்பம் மற்றும் பிரசவ செலவுகள் உட்பட.
(காப்பீடு செலுத்த வேண்டிய அனைத்து) பலன்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. கவனிக்க: பல் பராமரிப்பு அல்லது கண்ணாடிகளுக்கான செலவுகள் பொதுவாக ஈடுகட்டப் படாது.

□□□□□□□□□□ □□□□□□□□□□□□

உங்கள் காப்பீட்டுக்கான மாதாந்திர பிரீமியத்தை நீங்கள் செலுத்துகிறீர்கள்.
இந்த பிரீமியங்கள் மருத்துவ காப்பீட்டு நிறுவனம் மற்றும் காப்பீட்டு மாதிரியைப் பொறுத்து மாறுபடும்.
குறிப்பு: பலன்களை நேரம் ஒதுக்கி ஒப்பிட்டுப் பாருங்கள்.
நீங்கள் மருத்துவ காப்பீட்டு நிறுவனங்களை மாற்றலாம், ஆனால் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே (நவம்பர் இறுதிக்குள்).

□□□□□□□□□□□□□ □□□□ □□□□□□□□□□ □□□□□□□□□?

சுவிட்சர்லாந்தில், ஒரு மருத்துவ காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பணத்தைப் பெறுவதற்கு முன்பு, நீங்கள் முதலில் **franchise(□□□□□)** செலுத்த வேண்டும்.
பல சாத்தியமான கழிவுகள் உள்ளன: எடுத்துக்காட்டாக, CHF 300, CHF 500, CHF 1,000 அல்லது CHF 2,500 கழிவு. நீங்கள் விரும்பும் கழிவுத் தொகையை நீங்கள் தேர்வு செய்கிறீர்கள். முதலில் இந்தத் தொகையை நீங்களே செலுத்த வேண்டும்.
பின்னர், காப்பீட்டு நிறுவனம் செலவுகளில் ஒரு பகுதியை ஈடுகட்டுகிறது. அது செலவுகளில் 90% த்தை செலுத்துகிறது.
மீதமுள்ள 10% த்தை நீங்களே செலுத்த வேண்டும்.
மீதமுள்ள இந்த 10% த்தை **quote-part(□□□□□)** என்று அழைக்கப்படுகிறது.

பங்கிற்காக, நீங்கள் ஒரு பெரியவருக்கு வருடத்திற்கு அதிகபட்சமாக CHF 700 மற்றும் ஒரு குழந்தைக்கு CHF 350 செலுத்துகிறீர்கள். அடுத்து, செலவுகள் இதற்கு அதிகமாக இருந்தால், காப்பீடு அனைத்தையும் செலுத்தும்.
⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰ ⍰⍰⍰⍰⍰⍰⍰⍰?
நீங்கள் **⍰⍰⍰⍰⍰⍰⍰⍰⍰⍰⍰** நோய்வாய்ப் பட்டால், அதிக கழிவைத் தேர்வு செய்யவும். பிரீமியம் சற்று குறைவாகவே இருக்கும்.
நீங்கள் **⍰⍰⍰⍰⍰⍰⍰⍰** நோய்வாய்ப் பட்டால், குறைந்த கழிவைத் தேர்வு செய்யவும்.
ஆனால் பிரீமியம் சற்று அதிகமாகவே இருக்கும்.

விபத்து காப்பீடு

நீங்கள் ஒரு நிறுவனத்திற்கு வாரத்திற்கு 8 மணிநேரம் அல்லது அதற்கு மேல் வேலை செய்கிறீர்களா?
நீங்கள் உங்கள் நிறுவனத்தினால் வேலை மற்றும் ஓய்வு நேரத்தின் போது ஏற்படும் விபத்துகளுக்கு எதிராக தானாகவே காப்பீடு செய்யப்படுவீர்.
பிரீமியம் தொகை உங்கள் சம்பளத்திலிருந்து நேரடியாகக் கழிக்கப்படும்.
நீங்கள் வாரத்திற்கு 8 மணிநேரத்திற்கும் குறைவாக வேலை செய்தால், உங்கள் நிறுவனம் உங்களை தொழில் விபத்துகளுக்கு எதிராக மட்டுமே காப்பீடு செய்கிறது.
தொழில் அல்லாத விபத்துகளுக்கு எதிராக, அதாவது, உங்கள் ஓய்வு நேரத்திற்கு, நீங்கள் உங்களை காப்பீடு செய்ய வேண்டும்.
நீங்கள் சுயதொழில் செய்பவராகவோ அல்லது லாபகரமான தொழில் செய்யாதவராகவோ இருந்தால், உங்கள் மருத்துவ காப்பீட்டு நிறுவனத்தில் விபத்து காப்பீட்டையும் எடுக்க வேண்டும்.
லாபகரமான சுயதொழில் செய்பவர்கள் மற்றொரு காப்பீட்டாளரிடமிருந்து விபத்து காப்பீட்டையும் எடுக்கலாம்.

குறைவான மருத்துவ காப்பீட்டு பிரீமியம் செலுத்த

குறைந்த ஊதியம் உள்ளவர்கள் தங்கள் மருத்துவ காப்பீட்டு பிரீமியங்களை குறைவாக செலுத்தக் கோரலாம்.
இது மருத்துவ காப்பீட்டு பிரீமியங்களைக் குறைப்பதற்கான கோரிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.
இது அடிப்படை காப்பீட்டிற்கு மட்டுமே சாத்தியம். அவ்வாறு செய்ய, அவர்கள் டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் ஜூரா காந்தோனின் இழப்பீட்டு நிதி நிறுவனத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
சில நிபந்தனைகளைப் பொறுத்து, ஜூரா காந்தோனின் இழப்பீட்டு நிதி நிறுவனம் கோரிக்கையை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம்.
கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டால், அடுத்த ஆண்டு அந்த நபர் குறைந்த பிரீமியங்களைச் செலுத்துவார். பிரீமியம் குறைப்பு பற்றிய அனைத்து தகவல்களுக்கும், ஜூரா காந்தோனின் இழப்பீட்டு நிதி நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும்.

துணை காப்பீடுகள்

ஒரு நபர் காப்பீட்டின் கீழ் கூடுதல் பராமரிப்பைப் பெற விரும்பினால், அவர்கள் துணை காப்பீட்டை எடுக்கலாம். உதாரணமாக, அவர்கள் இயற்கை மருத்துவ முறைகள், மருத்துவமனையில் ஒரு தனி அறை அல்லது மலிவான பல் பராமரிப்பு ஆகியவற்றை விரும்பினால்.
துணை காப்பீடு கட்டாயமில்லை. அவை விருப்ப தேர்வுகளே.
பல மருத்துவ காப்பீட்டாளர்கள் துணை காப்பீட்டை வழங்குகிறார்கள். இந்த காப்பீடுகளுக்கு, மருத்துவ காப்பீட்டாளர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. பொதுவாக, ஏற்றுக் கொள்ளப் பட, நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/lassurance-maladie-et-accidents

பெற்றோர் மற்றும் குடும்பம்: விடுப்பு மற்றும் நிதி உதவி

குழந்தை பிறந்தவுடன், வேலை செய்யும் பெண்களுக்கு 14 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்புக்கு உரிமை உண்டு. தந்தையருக்கு குறைந்தது இரண்டு வாரங்கள் தந்தைமை விடுப்புக்கு உரிமை உண்டு. குடும்பங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் குடும்ப உதவித்தொகை மற்றும் கல்வி உதவித்தொகைகளைப் பெறுகின்றன.

மகப்பேறு விடுப்பு (அல்லது மகப்பேறு உதவித்தொகை)

குழந்தை பிறக்கும் போது வேலையில் இருக்கும் பெண்களுக்கு 14 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்புக்கு உரிமை உண்டு. இந்த சமயத்தில், அவர்கள் தங்கள் சம்பளத்தில் குறைந்தது 80% பெறுவார்கள்.
வேலையில்லாத பெண்கள் அல்லது வேலை செய்ய முடியாத பெண்கள் வேலையின்மை அலுவலகம் அல்லது காந்தோனிய இழப்பீட்டு நிதி அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்புக்கு உரிமை உள்ளதா என்று அவர்கள் கேட்க வேண்டும்.
பிறப்புக்குப் பிறகு, தாய்மார்கள் எட்டு வாரங்களுக்கு வேலை செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. இது தாய்மார்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டம்.

தந்தைமை விடுப்பு

தங்கள் குழந்தை பிறந்த பிறகு, தந்தையர் (அல்லது இரண்டாவது தாய்) 2 வாரங்கள் (14 நாட்கள்) ஊதியத்துடன் கூடிய தந்தைமை விடுப்புக்கு உரிமை உண்டு. தந்தையர் (அல்லது இரண்டாவது தாய்) இந்த 14 நாட்களை ஒரே மூச்சிலோ அல்லது விட்டுவிட்டோ எடுத்துக் கொள்ளலாம்.
குழந்தை பிறந்த 6 மாதங்களுக்குள் இந்த நாட்களை அவர்கள் எடுக்க வேண்டும்.

குடும்ப கொடுப்பனவுகள்

ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோர் கொடுப்பனவு பெறுகிறார்கள்.
குழந்தை 16 வயதாகும் வரை **????????????? ????????????** வழங்கப்படுகிறது.
குழந்தைகள் கட்டாயப் பள்ளிப்படிப்பு க்குப் பிறகு படிப்பை தொடர்கிறார்களா? அப்படியென்றால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரை **????????????? ????????????** ** **?????????????????. ????? ???????????? ???????? ????????????????? ??????? ????????? ?????????.**
தெரிந்து கொள்வது நல்லது**
அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு. பெற்றோர் வேலை செய்பவர்களா, சுயதொழில் செய்பவர்களா, வேலையில்லாதவர்களா அல்லது இருவரும் வேலையில்லாதவர்களா என்பது முக்கியமல்ல.
கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படுகின்றன. குடும்ப கொடுப்பனவுகளின் அளவு காந்தோனிலிருந்து காந்தோனிற்கு மாறுபடும்.
மேலும் தகவலுக்கு, உங்கள் நிறுவனத்தையோ அல்லது காந்தோனிய இழப்பீட்டு நிதி அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளவும்.

ஒரு குழந்தையின் வருகைக்கான பணம்

சுவிட்சர்லாந்தில், பல மண்டலங்கள் **???????? ????????????** செலுத்துகின்றன.
ஜூரா காந்தோனும் வழங்குகிறது. இது குழந்தையை வரவேற்பதற்கான ஒரு தடவை நிதி உதவி.
8 வயதுக்குட்பட்ட குழந்தையைத் தத்தெடுக்கும் பெற்றோருக்கு **???????????? ????????????** கிடைக்கும்.
மேலும் தகவலுக்கு, உங்கள் நிறுவனத்தையோ அல்லது காந்தோனிய இழப்பீட்டு நிதி அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளவும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/parents-et-famille-les-conges-et-les-aides-financieres

சமூக உதவி

வாழ்வதற்கு மிகக் குறைந்த அளவே பணம் உள்ளவர்களுக்கு சமூக உதவி ஆதரவை வழங்குகிறது. இந்த ஆதரவின் குறிக்கோள், மக்கள் தங்கள் சொந்த காலில் நின்று தங்களைக் கவனித்துக் கொள்ள உதவுவதாகும். சமூக உதவி காப்பீடு அல்ல. இது அரசாங்க உதவி.

சமூக உதவி

நீங்கள் கடினமான சூழ்நிலையில் அல்லது கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கிறீர்களா? உங்களிடம் மிகக் குறைந்த அளவே [வாழ்வதற்கான பணம்] உள்ளதா (90330)?
சமூக உதவி உங்களுக்கு உதவி வழங்க முடியும்.
இந்த உதவி சுவிட்சர்லாந்தில் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கிறது.
நிதி உதவிக்கு கூடுதலாக, அது சமூக சேவையாளரின் மூலமும் ஆதரவை வழங்குகிறது.
சமூக உதவியின் குறிக்கோள், மக்கள் தங்கள் நிதி மற்றும் சமூக சுதந்திரத்தை மீண்டும் பெற்று, கண்ணியமான வாழ்க்கையை நடத்த உதவுவதாகும்.
ஒரு நபர் போதுமான பிற உதவிகளைப் பெற்றால் (உதாரணமாக, வேலையின்மை கொடுப்பனவு, ஓய்வூதியம், சம்பளம் அல்லது பெற்றோர் ஆதரவு), சமூக உதவி பணம் கொடுக்காது. சமூக உதவி கடன்களையும் கட்டாது.

சமூக உதவிக்கு விண்ணப்பித்தல்

சமூக உதவிக்கு விண்ணப்பிக்க, உங்கள் மாவட்டத்தில் உள்ள பிராந்திய சமூக உதவி அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
மற்ற தகவல்களுடன், உங்கள் வருமானம் மற்றும் சொத்து பற்றிய தகவல்களை நீங்கள் வழங்க வேண்டும்.
பின்னர் அலுவலகம் உங்கள் விண்ணப்பத்தை பரிசீலிக்கும். உங்கள் சூழ்நிலைக்கு எந்த வகையான உதவி மற்றும் தொகை என்பதை காந்தோன் தீர்மானிக்கும்.
சமூக உதவி உங்களை சில நடவடிக்கைகளை எடுக்க கேட்கலாம். அது நிபந்தனைகளை விதிக்கலாம்.
நீங்கள் அவற்றைப் பின்பற்றத் தவறினால், நீங்கள் பெறும் தொகையைக் குறைக்கலாம்.
உங்கள் சமூக சேவையாளருடன் சந்திப்புகளில் கலந்து கொள்வது ??????????????.
மேலும் உங்கள் நிலைமையை மேம்படுத்த முடிந்த அனைத்தையும் செய்ய நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/securite-sociale/laide-sociale